அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு NASTEC

# வேலை வாய்ப்பு

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC), விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இயங்குகிறது.

பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை NASTEC கோருகிறது.

**உதவிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) பதவி - MM 1-1- 01 (ஒப்பந்த அடிப்படையில்)**

**தகுதிகள்:**

**வெளிப்புற விண்ணப்பதாரர்கள்: (பின்வருவனவற்றில் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட நிதி முகாமைத்துவம், கணக்கியல், வணிகம், வணிக நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், பொது நிர்வாகம் அல்லது இந்தப் பதவிக்கு பொருத்தமான பிற பாடத்துறைகளில் ஏதேனும் ஒரு பட்டம் பெற்றிருத்தல்.

   மற்றும்

2. முதலாம் பட்டத்தைப் பெற்றதன் பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், சபை, நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் ஸ்தாபனத்தில் கணக்கியல், நிர்வாகம் ஆகியவற்றில் ஆகக்குறைந்தது ஒரு வருட கால சேவை அனுபவம் பெற்றிருத்தல்.

   இந்தப் பதவிக்கு பொருத்தமான பாடத்துறையைக் கொண்ட, அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இடைக்காலப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

   மற்றும்

   மேற்கூறிய தகுதியைப் பெற்றதன் பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், சபை, நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் ஸ்தாபனத்தில் கணக்கியல், நிர்வாகம் ஆகியவற்றில் ஆகக்குறைந்தது ஒரு வருட கால சேவை அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்நாட்டு விண்ணப்பதாரர்கள்: (பின்வருவனவற்றில் 1 அல்லது 2)**

1. வெளிப்புற விண்ணப்பதாரர்களுக்குக் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பெற்றிருத்தல்.
2. இந்தப் பதவிக்கு பொருத்தமான பாடத்துறையில், இளநிலை முகாமையாளர் (JM) பிரிவில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது** : வயது 22க்கு குறையாமலும் 45க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். உள்நாட்டு விண்ணப்பதாரர்களுக்கு மேல் வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்** : MM 1-1 - 2025 ரூபா (91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240) (அடிப்படைச் சம்பளம் + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகள்)

**பதவியின் முக்கிய கடமைகள்:** மேலதிக விவரங்களுக்கு http://www.nastec.gov.lk இணைய தளத்தைப் பார்வையிடவும்.

**ஆட்சேர்ப்பு முறை:** போட்டி எழுத்துப்பரீட்சை மற்றும்/அல்லது பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடத்தப்படும் நேர்காணல் ஆகியவற்றின் முடிவுகளின் அடிப்படையில்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- விரிவான சுயவிவரக் குறிப்பு (bio-data), தொடர்புகொள்ளக்கூடிய இருவர் பற்றிய விவரங்கள் மற்றும் சான்றொப்பம் இடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளை 2026 ஆகஸ்ட் 07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக பணிப்பாளர்/தலைமை நிர்வாக அதிகாரி, தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 06 ஆம் தளம், விங் D, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பிக்கப்பட்ட பதவி உறைக்கு மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். அரசாங்க கூட்டுத்தாபனங்கள்/சபைகள்/பொதுத்துறையில் பணிபுரிபவர்களின் விண்ணப்பங்கள், பரிசீலனைக்குக் கருதப்பட வேண்டுமாயின், அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- இந்த நிரந்தரப் பதவிக்கு ஊழியர் சேமலாப நிதி (நிறுவன பங்களிப்பு 12%, ஊழியர் பங்களிப்பு 8%) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (நிறுவன பங்களிப்பு 3%) உரித்துடையது.

**பணிப்பாளர்/தலைமை நிர்வாக அதிகாரி**
**தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC)**
**06 ஆம் தளம், விங் D**
**கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்லை.**
**தொலைபேசி: +94 11 218 6711 தொலைநகல்: +94 11 218 6713**